HMOP.No.156/2023

சார்பு நீதிமன்றம், விருதுநகர்

நாள் –24.10.2025

எ.ம.சா.1– விக்னேஷ்வரன் த/பெ – கண்ணன்

<u>சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1) எனக்கு தற்போது 37 வயது ஆகும். நான் விருதுநகர் செந்தில்குமார நாடார் கல்லூரியில் 2007ம் வருடம் பி.எஸ்.சி.(ஐடி) படித்தேன். அதே கல்லூரியில் மனுதாரர் படித்து வந்தார் என்றால் சரிதான். மனுதாரர் 2007ம் வருடம் பி.எஸ்.சி(மைக்ரோபையாலஜி) படித்தார்.நான் முதுநிலை படிப்பு எதுவும் படிக்கவில்லை. நான் திருமணத்திற்கு முன்பு வரை எந்த வேலைக்கும் செல்லவில்லை என்றால் அட்டை கம்பெனி வைத்து நடத்தி வந்தேன். மேற்படி அட்டை கம்பெனி எனது பெரியம்மா பெயரில் உள்ளது. நான் தான் மேற்படி அட்டை கம்பெனியை நடத்தி வந்தேன். மனுதாரர் 2011–2013ம் வருடத்தில் எம்.எஸ்.சி (பயோடெக்னாலஜி) படித்தார். மனுதாரர் 2010–2012 வருடம் வரை எம்.எஸ்.சி படித்தார் என்றால் சரிதான். நானும், மனுதாரரும் ஒரே கல்லூரியில் படித்ததால் இருவரும் காதலித்து திருமணம் செய்து கொண்டோம் என்றால் சரிதான்.

2) எங்களது திருமணத்திற்கு எனது வீட்டில் முதலில் சம்மதம் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். நானும், மனுதாரரும் ஒரே சமூகத்தை சேர்ந்தவர்கள் என்பதால் எங்கள் வீட்டில் திருமணத்திற்கு சம்மதம் சொன்னார்கள் என்றால் சரியல்ல, இருவரும் விருப்பப்பட்டதால் சம்மதம் தெரிவித்தனர். நாங்கள் காதலித்து வந்த போது மனுதாரர் குடும்ப

விபரங்கள் எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. மனுதாரர் குடும்பத்தை பற்றி முழு விபரம் எனக்கு தெரிந்து தான் காதலித்தேன் என்றும், தற்போது வழக்கிற்காக அதனை மறுத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

3) திருமண பேச்சுவார்த்தை ஆரம்பித்த போது எனது வீட்டார் மனுதாரர் குடும்பத்தினரை பற்றி விசாரித்து அதன் பின்னர் சம்மதம் சொன்னார்கள் என்றால் சரியல்ல. எங்கள் காதல் பற்றி எனது வீட்டில் நான் சொன்ன பின்னர் எனது வீட்டினர் மனுதாரர் குடும்பத்தை விசாரித்து அதன் பின்னர் திருமணத்திற்கு சம்மதம் சொன்னார்கள் என்றால் சரியல்ல. திருமணத்தின் போது வரதட்சணை பற்றி பேசிய விபரம் எனக்கு தெரியாது. திருமணத்தின் போது வரதட்சணையாக எனது குடும்பத்தார் கேட்டதற்கிணங்க மனுதாரருக்கு 10 பவுன் நகை ரூ.50,000/- மதிப்புள்ள சீதன பொருட்களும், ரொக்கம் ரூ.2 லட்சமும் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல.

4) மேற்படி ரூ.2 லட்சம் ரொக்க பணத்தை வைத்து திருமணத்தை முடித்தோம் என்றால் சரியல்ல. 29.06.2014 ம் தேதி திருச்செந்தூரில் வைத்து எங்கள் திருமணம் நடந்தது என்றால் சரிதான். திருமணத்திற்கு பின்னர் எனது வீட்டில் வசித்து வந்தோம். எனது உடன் பிறந்த ஒரு அண்ணன் மட்டும் உள்ளார். எனது திருமணத்தின் போது எனது அண்ணன் அல்லம்பட்டியில் வசித்து வந்தார். எனது பெற்றோர் வீடு விருதுநகர் சேக்கிழார் தெருவில் உள்ளது என்றால் சரிதான். திருமணம் முடிந்து 2 நாட்கள் கழித்து பெற்றோர் வீட்டில் இருந்து அல்லம்பட்டியில் உள்ள எனது அண்ணன் வீட்டிற்கு குடியிருக்க சென்றோம் என்றால் சரிதான். திருமணத்திற்கு பின்னரும் நான் அட்டை கம்பெனி தான் நடத்தி

வந்தேன்.

5) மேற்படி அட்டை கம்பெனியை நானும், எனது குடும்பத்தாரும் சேர்ந்து கவனித்து வந்தோம். அட்டை கம்பெனி மூலமாக மாதம் ரூ.50,000/– வருமானம் வரும். நான் திருமணத்திற்கு பின்னர் அட்டை கம்பெனி நடத்தவில்லை என்றும், எந்தவொரு வேலைக்கும் செல்லவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. நான் வேலைக்கு போகாதால் எனது பணம் தேவைக்காக குடித்துவிட்டு வந்து மனுதாரரை அடித்து கொடுமைப்படுத்தினேன் என்றால் சரியல்ல. நான் புதியதாக தொழில் தொடங்குவதற்காக மனுதாரின் தகப்பனாரிடம் ரூ.2 லட்சம் வாங்கி வர சொல்லி மனுதாரரை கொடுமைப்படுத்தினேன் என்றால் சரியல்ல. 22.10.2015 ம் தேதி எங்களுக்கு கீர்த்தன் என்ற குழந்தை பிறந்தது என்றால் சரிதான். குழந்தை கருவுற்ற நாள் முதல் மனுதாருக்கான அனைத்து செலவுகளையும் அவரது பெற்றோர்கள் செய்தார்கள் என்றால் சரிதான்.

6) எனது எதிருரையில் மனுதாரர் தனிக்குடித்தனம் செல்வதற்காக அடிக்கடி பிரச்சனை செய்தார் என கூறியுள்ளேன் என்றால் சரிதான், எந்த தேதிகளில் அவ்வாறு பிரச்சனை செய்தார் என குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். அல்லம்பட்டியில் தனியாக வீடு எடுத்து குடியிருந்து வந்ததாக கூறுவது குறித்து அந்த வீட்டின் உரிமையாளரை விசாரித்தால் தெரியவரும் என்றால் சரிதான். குல்லூர் சந்தை ரோடு அல்லம்பட்டி ரோட்டில் உள்ள மீனாட்சி மேட்ச் இன்ட்ரசீஸ் அருகில் உள்ள வங்கி மேலாளர் வீட்டில் வசித்து வந்தோம். மேற்படி முகவரியில் உள்ள வீடு நானும், எனது அண்ணனும் சேர்ந்து வசித்து வந்த

வீடு என்றால் சரிதான். நான் தனியாக வீடு எதுவும் வாடகைக்கு எடுக்கவில்லை என்றால் சரிதான்.

7) மேற்படி வீட்டிற்கு வாடகை எங்கள் கம்பெனி வருமானத்தில் இருந்து செலுத்தினோம். நான் சம்பாதிக்கும் பணத்தில் இருந்து வாடகை செலுத்த முடியவில்லை என்றும், சொந்த வீட்டிற்கு சென்றுவிடலாம் என நான் கூறியதற்கு மனுதாரர் மறுத்தார் என்றும் எதிருரையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான், எனது மகன் பிறந்துவிட்டதால் எனது சொந்த வீட்டிற்கு செல்ல வேண்டும் என அவ்வாறு கூறினேன். 2015 ம் வருடம் நவம்பர் மாதம் சேக்கிழார் தெருவில் உள்ள எங்கள் சொந்த வீட்டிற்கு சென்றோம் என்றால் சரிதான். எனது மகன் சொந்த வீட்டில் வளர வேண்டும் என்ற எண்ணத்தில் சொந்த வீட்டிற்கு சென்றோம். என்னிடம் Honda Livo இருசக்கர வாகனம் உள்ளது. மேற்படி வாகனம் 6 மாதத்திற்கு முன்பாகவே வாங்கினேன்.

8) திருமணத்திற்கு பின்னர் மனுதாரர் பெற்றோரிடம் இருசக்கர வாகனம் வாங்கி தருமாறு கேட்டு மனுதாரரை கொடுமைப்படுத்தினேன் என்றால் சரியல்ல. மனுதாரரை கொடுமைப்படுத்தியதால் அவரது பெற்றோர் லோன் போட்டு இருசக்கர வாகனம் வாங்கி கொடுத்தார் என்றால் சரியல்ல. மனுதாரரை கொடுமைப்படுத்தியதால் அவரது பெற்றோர் லோன் போட்டு இருசக்கர வாகனம் வாங்கி கொடுத்தார் என்றும், மேற்படி லோனை மனுதாரர் பெற்றோர் அடைத்தார் என்றும் வழக்கிற்காக மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல, திருமணத்திற்கு முன்பு என்னிடம் இருசக்கர வாகனம் இருந்தது. நான் 2017 ம் வருடம் அஜீத் குமார் நடித்த விவேகம் படம் ரீலீஸ்க்காக ரூ.40,000/- மனுதாரின்

பெற்றோரிடம் வாங்கிவரும் படி கொடுமைப்படுத்தினேன் என்றால் சரியல்ல.

9) எனது தாயாருக்கு 60 வயதாகிறது. அவருக்கு அடிக்கடி உடல்நல குறைவு ஏற்படும் என்றால் சரிதான். எனது வருமானம் போதவில்லை என்ற காரணத்தால் மனுதாரரை வேலைக்கு செல்லுமாறு கட்டாயப்படுத்தினேன் என்றால் சரியல்ல, மனுதாரர் தான் வேலைக்கு செல்ல வேண்டும் என கூறினார். தற்போது அட்டை கம்பெனி நடத்தவில்லை. தற்போது PCS பருப்பு மில்லில் வேலை பார்த்து வருகிறேன். நான் வேலை பார்த்து சம்பளத்தை மனுதாரிடம் கொடுக்காத காரணத்தினால் தான் மனுதாரர் வேலைக்கு சென்றார் என்றால் சரியல்ல. நான் வேலை பார்த்த கம்பெனியில் தான் மனுதாரரையும் வேலைக்கு சேர்த்துவிட்டேன். எனக்கு மாதம் ரூ.12,000/— சம்பளம். மனுதாரருக்கு மாதம் ரூ.9,000/— சம்பளம். ஆரம்பத்தில் மனுதாரருக்கு ரூ.6,000/— சம்பளம் கொடுத்தார்கள்.

10) மனுதாரரை மேற்படி கம்பெனியில் வேலைக்கு சேர்ப்பதற்காக ரூ.10,000/— கேட்டு மனுதாரரை கொடுமைப்படுத்தினேன் என்றால் சரியல்ல. எங்களது குழந்தைக்கு மொட்டை போட்ட போது வந்த சுமார் 4 பவுன் நகையை மனுதாரிடம் இருந்து பிடுங்கி அடகு வைத்து தான்தோன்றிதனமாக செலவு செய்தேன் என்றால் சரியல்ல. 2019 ம் வருடம் இரண்டாவது குழந்தை பிறந்தது என்றால் சரிதான். சேக்கிழார் தெருவில் உள்ள வீட்டில் தற்போது வரை வசித்து வருகிறேன். நாங்கள் இருவரும் வேலைக்கு சென்ற காரணத்தினால் ஒரு குழந்தையை எனது வீட்டாரும், ஒரு குழந்தை மனுதாரர் வீட்டாரும் பார்க்க சொன்னோம்

என்றால் சரியல்ல. எனது தாயாருக்கு உடல்நிலை சரியில்லை என்பதாலும், எனது சம்மதம் பெற்று ஒரு குழந்தையை எனது வீட்டிலும், ஒரு குழந்தையை மனுதாரர் பெற்றோர் வீட்டிலும் விட்டோம் என்றால் சரியல்ல.

11) குழந்தை நகையை அடகு வைத்து செலவு செய்தது சம்மந்தமாக எனதுபெற்றோரிடம் மனுதாரர் சொன்னதற்கு எனது பெற்றோர் எனக்கு ஆதரவாக பேசினார் என்றால் சரியல்ல, நகை அடகு எதுவும் வைக்கவில்லை. எனது பெற்றோர் வீட்டில் வளர்ந்து வரும் மூத்த மகனிடம் மனுதாரரை பற்றி தவறாக கூறி மனுதாரிடம் சேர விடாமல் செய்தோம் என்றால் சரியல்ல. மனுதாரர் வேலைக்கு சென்று அவர் வாங்கும் சம்பளத்தை என்னிடம் கொடுக்கவில்லை என சொல்லவில்லை. மனுதாரர் ஆரம்ப காலத்தில் வாங்கிய ரூ.6,000/− சம்பளத்தில் எனது பெற்றோருக்கு ரூ.2,000/−ம் மனுதாரர் பெற்றோர்களுக்கு ரூ.2,000/−ம், குழந்தைகளுக்கு அஞ்சலக சேமிப்பு திட்டத்தில் ரூ.2,000/−ம் செலுத்தி வந்தார் என்றால் சரியல்ல.

12) என்னிடம் காட்டப்படும் அஞ்சலக சேமிப்பு கணக்கு புத்தகம் எனது குழந்தைகள் பெயரில் உள்ளது என்றால் சரிதான், மேற்படி சேமிப்பு கணக்கை நான் தான் ஆரம்பித்தேன். அதில் எனது மனைவி பணம் செலுத்தி வந்தார் என்றால் அது பற்றி என்னிடம் கூறவில்லை. மேற்படி விபரங்கள் அனைத்தும் எனக்கு தெரியும் என்றும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வருண் வாசுதேவ் பெயரில் உள்ள அஞ்சலக சேமிப்பு புத்தகம் நகல் **ம.சா.ஆ.5** ஆகும். கீர்த்தன் பெயரில் உள்ள அஞ்சலக சேமிப்பு புத்தகம் நகல் **ம.சா.ஆ.6** ஆகும். மனுதாரர்தனது

சம்பளத்தை தனது குழந்தைகளுக்காக சேமித்து வந்தார் என்றும், என்னிடம் வருமானத்தை தரவில்லை என கூறுவது பொய் என்றால் சரியல்ல.

13) நான் மனுதாரரையும், அவரது பெற்றோரையும் கொடுமைப்படுத்தினேன் என்றால் சரியல்ல. எனக்கு TMB வங்கியில் கணக்கு உள்ளது. வேறு வங்கியில் கணக்கு இல்லை. மனுதாரிடம் இருந்து வாங்கிய நகைகளை கிராம வங்கியில் அடகு வைத்தேன் என்றால் சரியல்ல. நகையை அடமானம் வைத்தது சம்மந்தமாக மனுதாரர் எனது பெற்றோரிடம் கூறியதற்கு அவன் விருப்பம் போல் வாழ்வான் என சொன்னார்கள் என்றால் சரியல்ல. அப்போது நானும், எனது பெற்றோர்களும் எங்களை எதிர்த்து பேசுவதாக கூறி மனுதாரரை இரண்டாவது குழந்தையுடன் வீட்டை விட்டு வெளியேற்றினோம் என்றால் சரியல்ல. மனுதாரர் வேறு வழியின்றி அவரது பெற்றோர் வீட்டிற்கு சென்றார் என்றால் சரியல்ல. எங்களுக்குள் பிரிவினை ஏற்பட்ட பின்னரும் இருவரும் ஒரே கம்பெனியில் வேலை பார்த்து வருகிறோம் என்றால் சரிதான். மனுதாரின் நகைகளை அவருக்கு தெரியாமல் எடுத்து சென்று எனது கம்பெனி உரிமையாளரிடம் கொடுத்து பணம் வாங்கினேன் என்றால் சரியல்ல. மனுதாரை வேலைக்கு சேர்க்கும் போது அந்த நகைக்காக மனுதாரர் சம்பளத்தை கழித்து கொள்ள வேண்டும் என கூறி சேர்த்தேன் என்றால் சரியல்ல.

14) எனது அக்கா மகள் திருமணத்திற்கு மனுதாரர் வர மறுத்ததாக சொல்வது குறித்து எனது அக்கா மற்றும் அவரது மகள் பெயர் மற்றும் திருமண தேதி விபரம் சொல்லவில்லை என்றால் சரிதான். எனக்கு உடன்

பிறந்த அக்கா யாரும் இல்லை என்றும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல, எனது பெரியம்மா மகள் ஆவார். நான் கம்பெனியில் வாங்கிய பணத்தை திருப்பி செலுத்தாததால் என்னை வேலையை விட்டு நிறுத்திவிட்டார்கள் என்றும், அதனால் மனுதாரர் மற்றும் அவரது பெற்றோர்களை கம்பெனியில் வைத்து தரக்குறைவாக பேசினேன் என்றால் சரியல்ல. தற்போது மனுதாரர் வேலையில் இருந்து விலகி விட்டார் என்றும், மேற்படி நகையை கம்பெனி உரிமையாளரிடம் கேட்டதற்கு நான் வந்து கேட்டால் கொடுப்பதாக கூறினார் என்றால் சரியல்ல.

15) கம்பெனி உரிமையாளரிடம் நான் கொடுத்து வைத்திருந்த நகையை மே மாதம், 2025 ம் வருடம் பெற்று அடகு வைத்து பணத்தை திருப்பி செலுத்தினேன் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் நகையை கம்பெனி உரிமையாளரிடம் கொடுக்கவில்லை என்பது குறித்து அவரை விசாரித்தால் தெரியவரும் என்றால் சரிதான். அவரை இவ்வழக்கில் விசாரிக்க தயாராக உள்ளேன் என்றால் சரிதான். மனுதாரருடன் சேர்ந்து வாழ்வதற்கு எனக்கு விருப்பம் இருந்தால் மனுதாரர் நகையை மீட்டு மனுதாரிடம் கொடுத்து இருப்பேன் என்றால் சரியல்ல. தற்போது வரை எந்த வேலைக்கும் செல்லாமல் இருந்து வருகிறேன் என்றால் சரியல்ல. மனுதாரர் ஜீவனாம்சம் கோரி வழக்கு தாக்கல் செய்து விடுவார் என்று பயந்து சேர்ந்து வாழக்கோரி மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் குழந்தைகளை பார்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரியல்ல. பெயரளவில் மனுதாரருடன் சேர்ந்து வாழ தயாராக இருப்பதாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. நான் தற்போது

வரை மனுதாரரின் பெற்றோர்களை இழிவாகவும், தரக்குறைவாகவும் அசிங்கமான வார்த்தைகளாலும் எனது வாட்ஸ்அப்பில் பதிவு செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. மனுதாரரை நான் மனதளவிலும், உடலளவிலும் பொருளாதார ரீதியாகவும் கொடுமைப்படுத்தியதால் மனுதாரர் கோரிய பரிகாரம் கிடைக்கக்கூடியது என்றால் சரியல்ல.